**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,பாலக்கோடு**

**முன்னிலை–திரு.G.அஜய் விக்ரிஷ் குமார்,B.B.A.,LLB.,(Hons).,**

**நீதித்துறை நடுவர், பாலக்கோடு**

**2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 02ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.47/2026**

**CNR No.TNDP05000490–2026**

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
பாலக்கோடு காவல் நிலையம்,
குற்ற எண்.55/2026 .......... குற்றமுறையிடுபவர்

/எதிராக/

அருணாசலம் (வயது 26/2026)
த/பெ. சின்னவேடி,
பன்னிஅள்ளி கிராமம் & அஞ்சல்,
கிருஷ்ணகிரி மாவட்டம். .......... எதிரி

இவ்வழக்கு01.04.2026–ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி பொது வழக்கறிஞர் நிலை–1அவர்களும், எதிரி தரப்பில் எதிரி தாமாக முன்னிலையாகியும், இந்நீதிமன்றத்தின் சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

1. புகார்தாரர் சக்திவேல் கடந்த 04.02.2026–ம் தேதி மதியம் 10.15 மணிக்கு அவருக்கு சொந்தமான TN 29 AS 7652 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை பாலக்கோடு, மணி சில்க்ஸ் என்ற துணி கடை முன்பு நிறுத்தி விட்டு இந்தியன் வங்கி மேல் தளத்தில் உள்ள GTC Tuition Center–க்கு சென்ற சமயத்தில் எதிரி அருணாச்சலம் என்பவர் மேற்படி இருசக்கர வாகனத்தை நேர்மையற்ற முறையில் குற்ற புரியும் எண்ணத்தில் திருடி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.02 18:36:51 +0530

சென்றுள்ளார். எனவே எதிரி மீது U/s.303(2) of BNS –ன் கீழ் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக பாலக்கோடு காவல் உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி மீது முகாந்திர வழக்கு இருந்ததால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் U/s.303(2) of BNS கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. இந்த வழக்கில் எதிரி ஆஜரானதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு U/s.230 of BNSS –ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, பின்னிட்டு இருதரப்பும் வாதமும் கேட்டு, ஆவணங்களை பரிசீலித்து எதிரி மீதான குற்ற செயலை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரி மீது U/s.303(2) of BNS –ன் கீழான குற்றச்சாட்டை வனைந்து விளக்கி கூறி வினவியபோது, எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

4. எதிரி குற்றத்தை தன்னிச்சையாக குற்ற ஒப்புதலைக் கருத்தில் கொண்டு, எதிரி U/s.303(2) of BNS–ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து அவருக்கு வழங்கப்படவிருக்கும் தண்டனை குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன் எனவும், தான் ஏழை என்றும், முதல் குற்றவாளி என்றும், குறைந்த பட்ச தண்டனை வழங்குமாறு வேண்டினார்.

5. முடிவில் எதிரியின் பதிலைக் கருத்தில் கொண்டு U/s.303(2) of BNS–ன் கீழான குற்றத்திற்கு எதிரியைத் தண்டித்து எதிரிக்கு 06 மாத காலம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், U/s.271(2) of BNSS–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி ஏற்கனவே சிறையிலிருந்த 13.03.2026 முதல் 02.06.2026–ம் தேதி வரையிலான 82 நாட்களை தண்டனைக் காலமாக கருதி U/s.468 of BNSS–ன் கீழ் கழிக்கவும் உத்தரவிடப்படுகிறது. அபராதம் எதுவும் விதிக்கப்படவில்லை.

இவ்வழக்கில் CP No.32/2026 –ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.02 18:36:56 +0530

சொத்தான TN 29 AS 7652 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை உரிமையாளர் கோவிந்தராஜ் என்பவர் இந்நீதிமன்ற Crl.M.P No.125/2026 நாள் 01.04.2026 உத்தரவின் படி இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றுள்ளார். மேற்படி வழக்கு சொத்தின் உரிமையாளர் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு மேற்படி வழக்கு சொத்தை அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும், அவர் எழுதிக்கொடுத்த வழக்கு சொத்துக்குண்டான பிணை ஆவணம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாகிவிடவும் உத்திரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 02-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G — Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.06.02 18:37:02 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பாலக்கோடு.

**<u>பின் இணைப்பு</u>**

1) அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

2) எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

AJAY VIKRESH KUMAR G — Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.06.02 18:37:08 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பாலக்கோடு.

**<u>பின்குறிப்பு</u>**

1. வழக்கு விசாரணையின் போது எதிரி சிறையில் இருந்து வருகிறார்.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.
3. எதிரிக்கு முடிவில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.
4. வழக்கு சொத்து குறித்து உத்தரவு பகரப்பட்டது.